2002 அக்டோபர் 30] [திரு. சி. பொன்னையன்]

Planning Commission, Finance Commission இவை கடைபிடிக்கின்ற வரைமுறை; நெறிமுறை. மாநிலத்தின் மொத்த வரி வருமானத்திலிருந்து 94 சதவீதம் அரசு ஊழியர்களுக்குச் செல்கிறது. அதைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விவாதம் இத்தோடு முடிந்தது.

பிற்பகல் 12-05

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2003 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 111 முதல் 113 வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேர்வைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 60 முதல் 62 வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின், சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 6-வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS